# ஏக் தோ டீன்!

## பட்டாம்பூச்சி குழந்தைகளின் பெற்றோருக்கு...

**கனாக்களும் வினாக்களும் நிறைந்த விடலைப்பருவம் மனித வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டம்! தவறுகளுக்கும் தடுமாற்றங்களுக்கும் இடையில் தத்தித் தாவும் வயது அது. டீன் ஏஜ் மனதுக்கு எது சரி, எது கூடாது எனப் பகுத்தறியத் தெரியாது. பக்குவமும் அறியாது.**

டீன் ஏஜ் என்கிற பதின்ம வயதை, பட்டாம்பூச்சிப் பருவத்தோடு ஒப்பிடுவதுதான் சரியாக இருக்கும். பட்டாம்பூச்சியானது, முட்டையாக உருவாகி, பிறகு புழுவாகி, அடுத்து கூட்டுப்புழுவாகி, திடீரென ஒரு நாள் சிறகு முளைத்துப் பறக்கத் தொடங்கும்.

குழந்தைகளும் அப்படித்தான். பிறந்தது முதல் அம்மா–அப்பாவின் அரவணைப்பிலும் கதகதப்பிலும் ஒரு சின்னக்கூட்டுக்குள் வளர்கிற அவர்களுக்கு ‘டீன் ஏஜ்’ என்கிற சிறகு முளைத்ததும், உலகமே விரிகிறது. பார்வையும் மாறுகிறது. பெற்றோரின் பாசவலையை தங்களைப் பிணைத்த விலங்காகவும் நினைக்க ஆரம்பிக்கின்றனர்.

பிள்ளைகள் இப்படி மாற, பெற்றோரின் நிலையோ வேறு!

ஒவ்வொரு நாளும் தம் குழந்தையின் வளர்ச்சியை ரசித்து, மகிழ்கிற பெற்றோருக்கு, பிள்ளைகள் டீன் ஏஜில் அடியெடுத்து வைத்ததும், ‘ஏன்தான் வளர்ந்தாங்களோ...’ என்கிற வெறுப்பே மிஞ்சுகிறது. வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பேசுவதும், பெற்றோர் பேச்சை அலட்சியம் செய்வதும், கட்டுப்பாடுகளை மீறுவதுமாக விடலைப்பருவத்தினர் செய்கிற ஒவ்வொரு செயலும் பெற்றோருக்கு கலக்கத்தையும் கவலையையுமே காணிக்கையாக்குகின்றன.

நேற்றுவரை குழந்தையாக இருந்த உங்கள் மகனோ, மகளோ, டீன் ஏஜில் காலெடுத்து வைத்ததும் பகையாவதேன்?

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான இந்த மல்லுக்கட்டில் யார் செய்வது சரி? எந்தப் பக்கம் நியாயம்? மாற வேண்டியது பெற்றோரா, பிள்ளைகளா?

இப்படியாக அணி வகுக்கிற அத்தனை கேள்விகளுக்கும் விடை சொல்லப் போகிறது இந்தப் பகுதி...

பிள்ளைகளின் தடுமாற்றங்கள், பெற்றோரின் மனப்போராட்டங்கள் என எல்லாவற்றுக்கும் காரண, காரியங்களை அலசி, தெளிவுப்படுத்தப் போகிறார் மனநல மருத்துவர் கவுதம் தாஸ். அவர் சந்தித்த சில விசித்திரமான டீன் எஜ் பிரச்னைகளும், அதற்கு அவர் சொன்ன ஆலோசனைகளும் உங்களுக்கேக் கூட தீர்வாக அமையலாம்!

‘அவ இப்பல்லாம் எதைச் சொன்னாலும் காதுலேயே வாங்கறதில்லை...’ – சலித்துக் கொள்கிறார் பாபு.

“எப்படியிருந்தவ, இன்னிக்கு எப்படி மாறிப் போயிட்டா...’ வருத்தப்படுகிறார் சரோ. பாபுவும் சரோவும் பேசுவது அவர்களது மகள் மாயாவைப் பற்றி...

“மாயா ரொம்ப நல்ல பொண்ணு. என்ன சொன்னாலும் கேட்பாள். கூடப் பிறந்தவங்கக்கிட்ட பாசமா இருப்பாள். வீட்டை நல்லா கவனிச்சுப்பாள். குறையே சொல்ல முடியாது. அப்படியிருந்தப்ப திடீர்னு ரொம்பவே


மாறிட்டாள். கொஞ்ச நாளா எங்கக்கிட்ட 'ஒரு செல்போன் வேணும்'னு கேட்டுக்கிட்டிருந்தாள். படிக்கிற பொண்ணுக்கு அது அவசியமில்லைன்னு நினைச்சு மறுத்துட்டோம். ஒருநாள் அவளோட பைக்குள்ள ஒரு செல்போனைப் பார்த்தேன். அதிர்ச்சியாகி, விசாரிச்சப்ப, ஸ்கூல் கிரவுண்டுல கிடந்ததாகவும், யாரோடதுன்னு கண்டுபிடிச்சுக் கொடுக்கறதுக்காக வச்சிருக்கிறதாகவும் சொன்னாள். நம்பினோம். அவளோட எண்ணத்தைப் பாராட்டினோம்.

எப்பவும் கொடுக்கறதை சாப்பிடறவ, கொஞ்ச நாளா, 'சாப்பாடு சரியில்லை'ன்னு குறை சொல்ல ஆரம்பிச்சாள். வெளியில சாப்பிட்டுக்கிறேன்னு சொல்லி பணம் கேட்க ஆரம்பிச்சாள். வழக்கமா நாங்க வாங்கிக் கொடுக்கற டிரஸ்ஸை போட்டுக்கிறவ, 'அதெல்லாம் பிடிக்கலை'ன்னு, உடம்பு தெரியற மாதிரி டிரஸ் பண்ண ஆரம்பிச்சாள். அழகு விஷயத்துக்காக நிறைய செலவு பண்ண ஆரம்பிச்சாள். ஒருநாள் அவளோட அலமாரியில விலை உயர்ந்த சென்ட் பாட்டிலைப் பார்த்தேன். 'ஏது'ன்னு கேட்டதுக்கு, 'என் ஃப்ரெண்ட் கொடுத்தது'ன்னு சொல்லி, 'வீட்ல எனக்கு சுதந்திரமோ, தனிமையோ இல்லை'ன்னு கத்தி, கூச்சல் போட்டாள். அதுக்கப்புறம் அவளை இன்னும் நெருக்கமா கண்காணிக்க ஆரம்பிச்சேன். 'தூக்கம் வருது'ன்னு சொல்லிட்டு, சீக்கிரமே தன் ரூமுக்குள்ள போய் கதவை சாத்திக்குவாள்.. சாவித் துவாரம் வழியா பார்த்தப்ப, செல்போன்ல மணிக்கணக்கா யார் யார்கிட்டயோ பேசிட்டிருந்தாள். ஒருநாள் கையும் களவுமா பிடிச்சு திட்டினேன். போனை பிடுங்கிப் பார்த்ததுல, அதுல நிறைய ஆம்பிளைப் பசங்களோட நம்பர்கள்... கோபத்துல



Shutterstock

**“அம்மாவும் அப்பாவும் என்னைப் புரிஞ்சுக்கிறதே இல்லை” என்கிறார் மாயா. 15 வயது மாயாவின் பார்வையில் அவளது பெற்றோர் அடக்கி ஆள்கிற, வெறுப்பூட்டுகிற மனிதர்கள்.**



அவளை அடிச்சிட்டேன். அதை எதிர்பார்க்காத மாயா, என்னைத் திருப்பித் தாக்கினது மட்டுமில்லாம, கெட்ட வார்த்தைகளால திட்டினாள். ‘நீயெல்லாம் ஒரு அம்மாவா? பெத்த மகளையே உளவு பார்க்கறியே’ன்னு கத்தினாள். மாயாவோட அப்பாவைக் கூப்பிடலாம்னு அடுத்த ரூமுக்கு போனேன். திரும்பி வர்றதுக்குள்ள, ஃபேன்ல தூக்கு மாட்டிக்க முயற்சி பண்ணிட்டிருந்தாள்... நான் என்ன தப்பு பண்ணினேன்? நேத்து வரை நல்லவளா இருந்த என் மகள், திடீர்னு ஏன் மூர்க்கமா மாறணும்? எங்களை ஏன் வெறுக்கணும்?” – கண்ணீருடன் கொட்டித் தீர்த்தார் சரோ.

“அம்மாவும் அப்பாவும் என்னைப் புரிஞ்சுக்கிறதே இல்லை” என்கிறார் மாயா. 15 வயது மாயாவின் பார்வையில் அவளது பெற்றோர் அடக்கி ஆள்கிற, வெறுப்பூட்டுகிற மனிதர்கள்.

மாயாவுக்கு மட்டுமில்லை. டீன் ஏஜில் அடியெடுத்து வைக்கிற அனேகம் பேரின் பார்வையும் இப்படித்தான். அந்த வயது அப்படி!

13 வயது வரை தனக்கென சுய அபிப்ராயங்களை உருவாக்கிக் கொள்ளும் திறமை பிள்ளைகளுக்கு இருப்பதில்லை. உண்மைக்கும் புனைவுக்குமான வித்தியாசம் தெரிவதில்லை. எல்லாவற்றுக்கும் அம்மா, அப்பாவிடமே கருத்து கேட்க வேண்டிய கட்டாயம். 13 வயதை நெருங்கியதும், அவர்களது மூளையில் திடீரென ‘பல்பு’ ஒளிர்கிறது. அதுவரை அந்தக் குழந்தைகளுக்கு உலகத்திலேயே மிக நல்லவர்களும், வல்லவர்களுமாக இருந்த பெற்றோர், பல்பு எரிய ஆரம்பித்ததும், ‘ஒன்றும் தெரியாதவர்கள்’ ஆகிறார்கள். அம்மா – அப்பாவிடம் தமது கேள்விகளுக்கு எதிர்பார்த்த விடைகள் கிடைக்காத போது, வினாக்களுக்கான விடைகளை வேறு நபர்களிடம் தேடுகிறார்கள். அதாவது நண்பர்களிடம்..!

டீன் ஏஜில் காலெடுத்து வைத்ததுமே, உளவியல் ரீதியான மாற்றங்களை உணர்கிறார்கள் பலரும். பெற்றோருடன் நிழல் போல ஒட்டிக்கொண்டிருந்தவர்கள், திடீரென தனிமையையும் சுதந்திரத்தையும் விரும்பத் தொடங்குகிறார்கள். பிரிவுக்கும் பக்குவத்துக்கும் அவர்கள் தயாராவதற்கான முதல் அறிகுறி இது. உடலளவில் வித்தியாச மாற்றங்களைப் பார்க்கிறார்கள். தன்னிலை உணர்வு அதிகரிக்கிறது. தம் மீதான மற்றவரது பார்வை குறித்து அக்கறை கூடுகிறது. அவர்கள் மத்தியில் தாம் தனித்துத் திகழ வேண்டும் என்கிற மெனக்கெடல்களில் ஆரம்பிக்கிறது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான மோதல்...



டாக்டர்
கவுதம் தாஸ்

பெரும்பாலான பெற்றோர் செய்கிற தவறு என்ன தெரியுமா? விடலைப்பருவத்தில் இருக்கிற எல்லாரையும் திமிர் பிடித்தவர்கள் மாதிரியும், தான்தோன்றிகளுமாகவே பார்ப்பது. பொத்தாம்பொதுவாக ஒட்டுமொத்த டீன் ஏஜ் சமுதாயத்தையும் அப்படிச் சொல்லிவிட முடியாது. வயதின் காரணமாக எழும் உணர்ச்சிகளின் ஏற்ற, இறக்கங்களின் வெளிப்பாடுதான் பிள்ளைகளிடம் பெற்றோர் உணர்கிற மாற்றங்கள்! டீன் ஏஜ் பிள்ளைகளின் ஒரே லட்சியம், விரும்பிய சுதந்திரத்தை அடைவது மட்டுமே! அதுவரை நெருக்கமாக இருந்த பெற்றோரிடமிருந்து திடீரென விலகிச் செல்வது, பெற்றோர்களுடனான அபிப்ராய பேதம் என எல்லாம் அந்த சுதந்திரத்தை நோக்கிய பிள்ளைகளின் போராட்டத்தின் ஒரு பகுதியே...

பொய் சொல்வது, பிடிவாதம் பிடிப்பது, மரியாதைக் குறைவாக நடந்து கொள்வது... டீன் ஏஜ் பிள்ளைகளின் குறைகளாக பெற்றோரின் குற்றப்பட்டியல் குறிப்பிடுகிற எந்த விஷயமும் ஒரே இரவில் உருவாவதில்லை. பிரச்னைகளுக்குக் காரணம் சாட்சாத் நீங்கள்தான் பெற்றோர்களே! யெஸ்... குழந்தை வளர்ப்பின் போது நீங்கள் விதைத்த விஷயங்கள்தான் டீன் ஏஜில் விருட்சமாகி, விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன.

நீங்கள் எந்த ரகமான பெற்றோர் எனத் தெரிந்து கொண்டால், உங்கள் குறையை நீங்களே நிச்சயம் ஒப்புக் கொள்வீர்கள். அதற்கு ஒரு டெஸ்ட் உண்டு.

அந்த டெஸ்ட் அடுத்த இதழில்!

**- சாஹா**

படம்: **ஆர்.சந்திரசேகர்**